செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பயிலரங்க எண்ணிக்கைகள்: 84 நாள்: 07.04.2025

# கிரந்த எழுத்துப் பயிலரங்கம்

# Workshop on Grantha Script

## பயிலரங்கம் - 03

(01.05.2025 - 07.05.2025)

### அறிவிப்பும் அழைப்பும்

மாந்தன் தன் தேவைகளையும் கருத்துகளையும் தெரிவிக்கப் பயன்படுத்திய கருவிகளே எழுத்து முறைகளாகும். இவ்வெழுத்து முறைகள் தொடக்கத்தில் குறியீடுகளாக இருந்தன. பின்னர் ஒவ்வோர் ஒலிக்கும் ஓர் எழுத்து என்னும் நிலை உருவாயிற்று. இவ்வெழுத்துநிலையே காலந்தோறும் மாற்றத்திற்கு ஆட்பட்டு இன்றுள்ள வரிவடிவ நிலையை எய்தியது. தமிழ் மொழியின் வரிவடிவமும் இத்தகைய நிலைக்கு ஆட்பட்டுக் காலந்தோறும் மாற்றம் எய்தி வந்துள்ளது.

தமிழ் மொழியின் தொன்மையான எழுத்து வடிவம் தமிழி (தமிழ்-பிராமி) ஆகும். இதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக உருவான எழுத்துமுறை வட்டெழுத்து ஆகும். இதனை அடுத்துத் தோன்றிய எழுத்து முறையே கிரந்த எழுத்து ஆகும். பல்லவர் காலத்தில் உருவாக்கம் பெற்ற இவ்வெழுத்து முறை வடமொழியை எழுதப் பயன்பட்ட எழுத்து முறையாகும். மலையாளத்தின் எழுத்து முறையும் இக் கிரந்த எழுத்து முறையிலிருந்து தோற்றம் பெற்றதேயாகும். தமிழகத்தில் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் ஓலைச்சுவடிகளிலும் இவ்வெழுத்து முறை காணப்படுகிறது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழி, வட்டெழுத்து ஆகியவை தொடர்பான பயிலரங்குகளை ஏற்கனவே நடத்தியுள்ளது. அதன் தொடர்ச்சியாக இத்தகைய சிறப்புமிக்க எழுத்து முறையை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் நோக்கில் இந்தப் பயிலரங்கை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

கிரந்த எழுத்துத் தோற்றத்தின் வரலாற்றுப் பின்னணி, இவ்வெழுத்துகள் கிடைத்த இடங்கள், சமயத் தொடர்பு, இவ்வெழுத்துகளை வாசித்தறிதல், எழுதப்

பழக்குதல் ஆகியவையும் இப்பயிலரங்கில் நடத்தப்பெறும். மேலும் கிரந்த எழுத்துக் கல்வெட்டினை நேரடியாகச் சென்று வாசித்தறியக் கள ஆய்வும் இப்பயிலரங்கில் மேற்கொள்ளப்படும்.

இப்பயிலரங்கில் தொல்லியல் அறிஞர்கள் பயிற்றுவிக்க உள்ளனர். பல்கலைக்கழகம் / கல்லூரிகளில் தமிழியல், வரலாறு, தொல்லியல் துறையில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களையும் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறையின் முதுகலை மாணவர்களையும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

- ❖ பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – 40
- ❖ பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 01.05.2025 முதல் 07.05.2025 வரை 7 நாட்கள்.
- ❖ பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 1.00 & மாலை 2.00 - 5.00.
- ❖ பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- ❖ பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- ❖ பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- ❖ பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- ❖ இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/q597JzeFniSnLNZRA என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 24.04.2025 காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.

❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 25.04.2025 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் 26 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.

❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**